Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　*peoples daily*　மக்கள் தினசரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 04　( 20 - 09 - 1991 )　வெள்ளிக்கிழமை　ஓசை 214

## ஆட்சேர்ப்பின்புலனாய்வு தகவல் பெறவும்

அரச சேவைக்காக ஆட்களைச் சேர்க்க முன்னர் தேசிய புலனாய்வுப் பணியகத்திலிருந்து அவர்களைப் பற்றிய தகவல்களைப் பெறவேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. பெறப்பட்ட தகவல்கள் பாதுகாப்புத் தொடர்பாக திருப்திகொள்ளக் கூடியதாக இருந்தால் மட்டுமே பதவிகளுக்கான நியமனங்களை வழங்கவேண்டும் என்றும் அந்தஅமைச்சு தெரிவித்துள்ளது. இத்தகையதகவல்களை கொழும்பிலுள்ள தேசிய (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவில் தீவிரமடையும்

# அரசியல் நெருக்கடி

## மேலும் இரு அமைச்சர்கள் இராஜினாமா

(கொழும்பு)

சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்து வருவதாகவும் மேலும் இரு அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளதாகவும கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் ஆயுத விநியோகம் செய்ததாகசொல்லப்படுவதை அடுத்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில பதவி விலகியதாக அந்த அமைச்சர்கள தெரிவித்துள்ளனர்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை ராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீரவும், சுரங்கக் கைத்தொழில் திட்டமிடல் அமைச்சர் ஆரியரட்ண ஜெய திலக்கவுமே இவ்வாறு பதவி விலகியவர்களாவர்.

இவர்களுடன் மொத்தம் ஐந்து அமைச்சர்கள் தமது பதவியிலிருந்து விலகியுள்ளனர்.

இந்த அமைச்சர்கள் பதவி (4ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரின் தீர்ப்பே உறுதியும் இறுதியுமானது

**- ஸ்ரான்லி திலகரட்னா**

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை மனு தொடர்பான தற்போதைய சர்ச்சைக்கு முடிவு காணும் பொறுப்பு சபாநாயகருக்கே உண்டு. இவ்விடயத்தில் அவரது தீர்ப்பே உறுதியானதும் இறுதியானதுமாகும் எனமுன்னாள் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரட்னா தெரிவித்துள்ளார்.

எமது அரசியலமைப்பின்படி பாராளுமன்றமானது அதி உயர் சட்டவாககபீடமாகத் திகழ்கிறது அதன் நீதிபதியாக சபாநாயகர்திகழ்கிறார். எனவே சுதந்திரமாகவும், சுயேட்சையாகவும் செயற்பட அவருக்குப்போதிய அதிகாரங்கள் உண்டுஎன்றும் அவர் கூறினார்.

4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் உக்கிரப்போர் தொடர்ந்தும் நிகழ்கின்றது

**-கேணல் முனசிங்கா**

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்தும் உக்கிரப் போர் நடந்து கொண்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார். மேலும் அவர் புலிகள் தங்கள் தளத்தினைப் பலப்படுத்துவதற்கு 3000 பேரை பல மாவட்டங்களில் இருந்து கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப் பகுதியில் ஒவ்வொரு அங்குலத்திற்கும் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கேணல் முனசிங்கா இப் பகுதியில் உள்ள முகாமை முற்றிலும் அழிக்க இராணு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றுப் போரில் 15 புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்று வரும் மோதலில் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் பதினைந்து போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

திங்கட்கிழமை மோதலில்

★ கிரான் (விஸ்வலிங்கம் சிவலிங்கம், நெடுங்கேணி),

★ சுந்தர் (நல்லையா கோகிலதாஸ், முல்லைத்தீவு),

★ ரவிராஜ் (மல்லாகன் சந்திர மாகன் நயினாமடு, நெடுங்கேணி),

★ கலாஞ்சனி (சந்திராதேவி சோமசுந்தரம், புளியங்குளம் ஒட்டிசுட்டான்),

★ நவராஜ் (பிறேமதாஸ் பிறேமரட்ணம் பம்பைமடு, வவுனியா),

★ ஜனனி (கமலாதேவி சந்தையா முருங்கன், மன்னார்).

(4ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்மீது தாக்கு

# சபாநாயகரின் தீர்ப்பே உறுதியும் இறுதியுமானது

**- ஸ்ராண்லி திலகரட்னா**

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை மனு தொடர்பான தற்போதைய சர்ச்சைக்கு முடிவு காணும் பொறுப்பு சபாநாயகருக்கே உண்டு. இவ்விடயத்தில் அவரது தீர்ப்பே உறுதியானதும் இறுதியானதுமாகும் எனமுன்னாள் சபாநாயகர் ஸ்ராண்லி திலகரட்னா தெரிவித்துள்ளார்.

எமது அரசியலமைப்பின்படி பாராளுமன்றமானது அதிஉயர் சட்டவாககபீடமாகத் திகழ்கிறது அதன் நீதிபதியாக சபாநாயகர்திகழ்கிறார். எனவே சுதந்திரமாகவும், சுயேட்சையாகவும் செயற்பட அவருக்குப்போதிய அதிகாரங்கள் உண்டுஎன்றும் அவர் கூறினார்.

4ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதம் கொடுத்ததென்பது தவறான-பொய்யான குற்றச்சாட்டு

**- பிரேமதாசா**

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களை தவறான வழியில் ஏமாற்றி கையெழுத்துப் பெற்றமை ஒரு சதிமுயற்சியாகும். இச்சதிமுயற்சி பற்றி மூன்று மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டுக் காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன, இது எதிர்க்கட்சித் தலைவர்கள் வெளியிடட பத்திரிகை அறிக்கைகள் மூலம் தெளிவாகிறது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நேற்று நடந்த பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் அரசியலமைப்பு சட்டம் மாற்றப்படவேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள் ஐ. தே. கட்சியில் இருந்தபோது இதுபற்றி எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லையெனவும் கூறினார். அத்துடன், தாம் விடுதலைப் புலிகளுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுகவீனமுற்றிருந்த 10பேர் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த சுமார் பத்துப் பொதுமக்கள் நேற்று விடுதலையாகியுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டின் பேரில் இவர்கள் விடுதலையாகியுள்ளனர். இவர்களில் சுமார் ஆறு பேர் கடும்சுகவீனமுற்ற நிலையில் படுத்த படுக்கையில் வைத்து இவர்களது உறவினர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதே வேளை முன்னர் வந்த செய்திகளில் 22 பேர் விடுதலையாவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"நான் ஆத்ம ரீதியாக உணர்கிறேன், இன்றில்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

— திலீபன்

(B/3146) தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## வீரவணக்கம்

### டேவிட்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் இராணுவ முகாம் இராணுவத்தினருடன் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதலின் போது வீரவேங்கை டேவிட்[ செழியன்) குணரத்தினம் செல்வகுமார் இராஜேந்திரகுளம் வவுனியா] என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்று வரும் மோதலில் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் பதினைந்து போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

திங்கட்கிழமை மோதலில்

★ கிரான் (விஸ்வலிங்கம் சிவலிங்கம், நெடுங்கேணி),

★ சுந்தர் நல்லையா ஜோகிலதாஸ், முல்லைத்தீவு),

★ ரவிராஜ் (மல்லாகன் சந்திரமாகன் நயினாமடு, நெடுங்கேணி),

★ கலாஞ்சனி (சந்திராதேவி சோமசுந்தரம், புளியங்குளம் ஒட்டிசுட்டான்),

★ நவராஜ் (பிறேமதாஸ் பிறேமரட்ணம் பம்பைமடு, வவுனியா),

★ ஜனனி (கமலாதேவி சந்தையா முருங்கன், மன்னார்).

(4ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்மீது தாக்கு 2 படை பலி; ஆயுதம் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. இச் சம்பவத்தில் புலிகள் தரப்பில் வீரவேங்கை டேவிட் வீரமரணமடைந்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் முதல் 6 மணி நேர பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலைகள்அனைத்தும்அடுத்தவாரம் முதல் 6மணி நேரம் செயற்படும் என யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

நாளாந்தம் 8பாடங்களும் வழமைபோல் நாற்பது நிமிடங்கள் வீதம் நடைபெறும். மூன்றாவதுபாடமுடிவில்பத்து நிமிடங்கள் தேநீர் இடைவேளைக்காகவும் ஐந்தாவது

(4ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூர் மருந்து திருட்டு யாழ். நகரில் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சூர்யா மருந்து நிலையத்தில் கடந்த வெள்ளியன்று கடையை உடைத்துத் திருடியவர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் பிடிபட்டுள்ளார்.

ரூபா 60 000 பெறுமதியான மருந்துவகைகளையும், பால் மாவையும் திருடிய இவர், திருடிய பொருள்களில் ஒரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வீடுகள் யாவும் தரைமட்டம்; பொருள்கள் எல்லாம் சூறை

(யாழ்ப்பாணம்)

''வலி. வடக்கில் சிறிலங்கா படைகள் ஆக்கிரமித்திருக்கும் பொதுமக்களின் குடியிருப்புக்கள் அத்தனையும் படையினரால் சூறையாடப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான குடியிருப்புக்கள் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன''. இவ்வாறு இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்து நேற்று விடுதலையாகிய தையிட்டியைச் சேர்ந்த சின்னம்மா, பொன்னம்மா ஆகிய வயோதிப பெண்மணிகள் தெரிவித்தனர்.

இவர்கள் மேலும் தகவல் வெளியிடுகையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதிகளில் காணப்படும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

14-09-91 இரவு முறிகண்டிக்கும், மாங்குளத்திற்கும் இடையில் முக்கிய ஆவணங்களும், அடையாள அட்டையும் (இல. 636980722V) அடங்கிய பைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கீதாஸ்ரோர்ஸ் திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1765)

### சுத்தமான வேப்பெண்ணெய்

விளக்கெரிக்க-கிருமி, பூச்சி, பீடை தொல்லையிலிருந்து விடுபட வேப்பெண்ணெய். மில்க்வைற் தொழிலகத்திலும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. (R/3140)

### தவறிவிட்டது

7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தி. நேசராசன் என்பவருடைய அடையாள அட்டை, [இல. 642840576V] பாஸ், JobCard என்பன புதுக்குடியிருப்பு-பரந்தனுக்கிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (R-1767)


# பிரஸ்லர் சட்டத்திலிருந்து இந்தியாவிற்கு விலக்கு

(வாஷிங்டன்)

இந்தியாவிற்கு அளிக்கப்படும் அமெரிக்க உதவி 'பிரஸ்லர்' திருத்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்க பிரதிநிதிகள் சபை முன்பு தீர்மானித்ததை அமெரிக்க பாராளுமன்றம் ரத்துச் செய்துள்ளது.

செனற் உறுப்பினர்களும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமெரிக்க உதவி பெறுவதில் பாகிஸ்தானைப் போலவே இந்தியாவையும் பிரஸ்லர் சட்ட விதிகளுக்கு உட்படுத்த வேண்டும் என்று அண்மையில் பிரதிநிதிகள் சபை ஒரு திருத்தம் செய்திருந்தது.

பிரஸ்லர் திருத்த சட்டத்தின் கீழ் அந்நாட்டிடம் அணு சாதனம் எதுவும் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஆண்டுதோறும் சான்றிதழ் கொடுத்தால் தான் அந்நாடு அமெரிக்க உதவியை பெற முடியும்.

### சிதம்பரனார் மாவட்டத்தில்

# புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கை

(சென்னை)

சிதம்பரனார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக காவல் துறை அறிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள்வலுப்படுத்தப்பட்டுள்ளதோடு இப்பகுதியிலுள்ள இருபது கடலோர கிராமங்களில் பொதுமக்கள் கண்காணிப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளனஎன்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகள் மன்னார் வளைகுடாப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் தமிழகம் வருவதைக் கட்டுப் படுத்தமுடியும் என்றும் காவல் துறை தெரிவித்துள்ளது.

## ஞாயிறு வெளிவரும்

இதுவரை காலமும் வெள்ளி மஞ்சரியில் வெளிவந்த 'இவ் வார நோக்கு' ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்ந்து வெளிவரும்.

# ஆசிரியர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேசஆசிரியர்தினத்தையொட்டி யாழ். கல்வித் திணைக்களம் ஆசிரியர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

கல்விக் கோட்ட மட்டத்தில் நடாத்தப்படவிருக்கும் இப் போட்டிகளில் ஆர்வமுள்ள ஆசிரியர்களைக் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை ஆகியவற்றிலேயே போட்டிகள் நடாத்தப்படவிருக்கின்றன. ஆக்கங்களை திரு. இ. சரவணபவன்அதிபர், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றது. (க)

தியாகத்துளி - 6

### மூச்சு

பாசத் திலீபனே! - இத்
தேசத்தை நேசித்த
ஆசைப் புதல்வனே! - நீ
மாசற்ற நிலவடா!
வீசும் தென்றலுன்
மூச்சில் விழுமடா!

வாஞ்சிநாதன்


## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 20

1986ஆம் ஆண்டு சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
வசந்தன் (கு. பரமேஸ்வரன்)

1987ஆம் ஆண்டு இராணுவத்தினரின் நடவடிக்கையின் பின் வவுனியா செக்கடிபுலவில் சடலங்களாக மீட்கப்பட்ட 2 தமிழர்கள்

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
சத்தியன் (பத்மநாதன் ஜெகராசா - புலோலி, பருத்தித்துறை)

அம்பாறையில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3145)



## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

G.A.Q
Ist in Com.

யாழ். பல்கலைக் கழக விரிவுரைகள்
ஆரம்பம்:- 21-09-1991
பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரைகள்
ஆரம்பம்:- 05 10-1991
விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**
NEW COLLECE OF HIGH STUDIES
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம். (B/3147)



# டிப்ளோமா மனைப் பொருளியல்

## Diploma in Home Economics

- கேக் ஐசிங்
- சமையற் கலை [கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்]
- தையற் கலை [குழந்தைகள், சிறுவர்கள் மகளிருக்கான, உடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்]
- கைவேலை [மக்றமி, நூல் வேலைப்பாடுகள், கம்பளி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், வாழைநார் வேலைப்பாடுகள்]
- பூவேலை [கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்]
- வர்ணம் தீட்டுதல் [துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத் தட்டுக்களிலும்]
- சித்திரக்கலை [சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

பயிற்சிக்காலம் 6 மாதங்கள்

- பயிற்சி முடிவில் Diploma in Home Economics தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமைநாள் வகுப்புக்கள் திங்கள், புதன் ஆகிய இருதினங்களில் காலை 9-00 மணி முதல் 1-00 மணிவரை நடைபெறும்.
- தொழில் புரிவோர், பாடசாலை மாணவிகள் வசதி கருதி சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறும்.

| | |
|---|---|
| புதிய கிழமை வகுப்புகள் ஆரம்பம் | 25 - 09 - 91 |
| சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் | 28 - 09 - 91 |

விபரங்களுக்கு: **கலாலயா**
விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்நகர்.

(B/3148)

### சிந்தனைக்கு

நல்லது சிறந்தது எதையும் சாதிக்க விரும்பினால் எழுந்து முனைந்து செயலாற்ற வேண்டும்.

— அன்னை சாரதாதேவி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20 09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம்
அ பெ. எண் 05

# தொண்டமான் மனத்தில் கொள்ள வேண்டியது

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைக்குரிய அடிப்படை அம்சங்கள் கொண்ட கடிதம் ஒன்றை உல்லாச பிரயாணத்துறை, கிராமியத் தொழிற்துறை அமைச்சரும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித்தலைவருமான செள. தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ளார்,

இதனை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளதோடு, இந்த அடிப்படை அம்சங்கள் எவை எனக்குறித்துக் கருத்து எதுவும் வெளியிடவில்லை. ஆனால், இப்பேட்டியில் அவர் குறிப்பிட்ட வேறு சில அம்சங்களையும், அவரது அபிப்பிராயத்தையும் கொண்டு அவர் எந்தளவில் சமாதான திட்ட ஆலோசனைகளை வைத்துள்ளார் என்பதை ஊகிக்க முடியும் தொண்டமான் தனது பேட்டியின் ஒரு பகுதியில் ராஜீவ் காந்தி-ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஒப்பந்தம் இலங்கைத் தமிழருக்கு தமிழீழத்தைத் தவிர மற்றைய சகல உரிமைகளையும் வழங்குகின்றது எனத் தெரிவித்துள்ளார். இது இவர் இலங்கைத் தமிழரின் பிரச்சினையை எந்தளவிற்குப் புரிந்து கொண்டார் என்பது குறித்து சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக செய்து கொண்ட ராஜீவ் காந்தியே இந்தளவிற்கு உரிமைகள் நிறைந்ததாகக் கூறவில்லை. குறைந்தபட்ச நடவடிக்கையாக வடக்கு — கிழக்கு ஒன்றாக இணைந்த ஒரு தாயகம் என்பதைக் கூட அந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளவில்லை.

அமைச்சர் தொண்டமான் தனிப்பட்ட ரீதியிலும் சரி, சிறிலங்கா அரசாங்கத்தில் அமைச்சர் என்ற ரீதியிலும் சரி பேச்சுவார்த்தை நடத்துவதையோ, இனப்பிரச்சினையை சமாதான முயற்சி மூலம் தீர்ப்பதற்கு முன் முயற்சி எடுப்பதையோ எவருமே குறை கூறவில்லை. ஆனால், பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு, அரசியல் லாபநோக்கு எதுவுமின்றித் தொழிற்படுவதன் மூலமே சமாதான முன்முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய 'அமைதிப்படையை' நோக்கி புலிகள் தங்கள் ஆயுதங்களை திருப்பிய போதே இந்திய அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம்மூண்டது என தொண்டமான் பேட்டியில் குறிப்பிட்டுள்ளமை வரலாற்றைத் திரிக்கும் ஒரு நடவடிக்கையாகும். இலங்கைத்தமிழருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிராக இந்திய இராணுவம் எடுத்த நடவடிக்கைகளையும் புலிகள் மீது ஒரு யுத்தத்தை இந்தியா எவ்வாறு வலிந்து திணித்தது என்பதையும் அமைச்சர் தொண்டமான் புரிந்து கொள்ளாமல் இருக்கமுடியாது. இந்த நிலையில், புலிகள் இந்திய இராணுவத்தினர் மீது துப்பாக்கியைத் திருப்பினர் எனக் கூறுவது அவரின் சமாதான முயற்சிகளையே பாதிக்கும் ஒரு விடயமாகும்.

மேலும் அமைச்சர் தொண்டமான் புலிகள் பழைய போக்கில் இருந்து மாறவில்லை என்றால் பாரதூரமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டும் என எச்சரிக்கை விட்டிருப்பது அவர் புலிகளை மிரட்டிப் பணிய வைக்கலாம் என எண்ணுவது போல் தெரிகிறது. அவ்வாறானதொரு எண்ணத்தை அமைச்சர் கொண்டிருப்பாரேயானால் அது அவரது முயற்சிக்கு மேலும் பெரும் பங்கம் ஏற்படுத்தும் ஒன்றாகும். தமிழ் மக்களோ விடுதலைப் புலிகளோ எவரது மிரட்டலுக்கும் எப்பொழுதும் பணிந்து போனது கிடையாது. 1983இல் இருந்து மிரட்டிவரும் சிறிலங்கா இராணுவத்திற்கோ அன்றி 1987, 1988 ஆண்டுகளில் மிரட்டிய இந்திய இராணுவத்திற்கோ அவர்கள் எவரும் பணிந்து போகவில்லை.

இந்நிலையில், அமைச்சர் தொண்டமானின் மிரட்டலுக்கோ அச்சுறுத்தல்களுக்கோ இங்கே எவரும் பணிந்து விடப்போவதில்லை. ஆனால், இவ்வாறான தொண்டமானின் அறிக்கைகள் சமாதான முயற்சியில் ஈடுபடும் ஒருவருக்கு ஏற்புடையதல்ல. சமாதான முயற்சியில் ஈடுபடுபவர் ஒருவர் எக்கட்சியையோ அமைப்பையோ சார்ந்தவராக இருப்பினும், அவற்றை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு பிரச்சினைகளை நியாயமான முறையில் பேச வேண்டும். அதுவே அவரது முயற்சி முன்னேற்றமடைவதற்கும் பலாபலன் ஏற்படுவதற்கும் வழி வகுக்கும்.

அமைச்சர் தொண்டமான் நேரத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப கொள்கைகளை மாற்றுபவர், பேசுபவர் என்றும், முன்னரே தெரிவிக்கப்பட்டு வருவது போன்றே தற்பொழுதும் இனப்பிரச்சினை விவகாரத்திலும் அவர் நடந்து கொள்வாரானால் அவரது முயற்சியும் காலம் கடத்தும் ஒரு நடவடிக்கையாக மட்டுமே அமைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

# இரத்த ஆறு பாய்கிறது

யூகோசிலோவியாவின் சமஷ்டி இராணுவத்தின் 580ஆவது படையணியின் 2ஆவது பீரங்கிப் பிரிவு மேற்குஸ்லோவேனியா (Slovenia)விலுள்ள வெலிக்காவாஸ் (Velikavas) கிராமத்திற்கு அணித்தாக ஸ்லோவேனிய (Slovenia) தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. அந்த ஒரு தனிப்பிரிவின் அறுபது இராணுவத்தினரும் பன்னிரண்டு கவச வாகனங்களும் ஐந்து நாட்களாக தொடர்ந்து நகர்ந்து கொண்டிருந்தன யூன் மாதம் 25ஆம் திகதி சுதந்திரப்பிரகடனம் செய்து கொண்ட ஸ்லோவேனிய (Slovenia)'க் குடியரசை மீண்டும் சமஸ்டி அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கையில் ஈடுபடும்படி அரசினால் பணிக்கப்பட்டிருந்த இவர்கள்ஸ்லோவேனியர்களால் தெருக்களில் போடப்பட்டிருந்த தொடர்ச்சியான வழி மறிப்புக்களால் தாமதிக்கப்பட்டு இறுதியில் வெலிக்காவாஸ் (Velikavas) கிராமத்தில் மேலும் முன்னேறிச் செல்ல முடியாதவாறு வழிமறிக்கப்பட்டனர்.

சாலை ஓரத்தின் அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து அணிக்குப் பின்னால் மறைந்திருந்த ஸ்லோவேனிய (Slovenia) தீவிரவாதிகள் திடீரெனத் தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களாலும் ஆர்.பி.ஜி கிரேனட்டுக்களாலும் சமஷ்டி இராணுவத்தின் 580ஆவது படையணியின்மீது தாக்குதலை மேற்கொண்டனர். தங்கள் பாதுகாப்பிற்கு மறைவிடங்களைத் தேடிக் கொண்ட இராணுவத்தினர் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளால் தீவிரவாதிகளை திருப்பித் தாக்கினர். தாக்குதல் முடிவுற்றுப் புகை மண்டலம் அடங்கிய போது, இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டும், நான்கு பேர் காயப்பட்டும் இருந்ததைக் காணமுடிந்தது. படையினர் நிலை குலைந்தனர். ''நாங்கள் எப்படியும் உயிருடன் தப்பி கார்லோவாக் (Karlovac) செல்ல வேண்டும்'' எனக் கோப்ரல் நெபோஜ்யா ஜன்கோவிக் (Nebojsa Jankovic) கூறினார். சேர்பியா (Serbia)விலிருந்து கட்டாயமாக இராணுவ சேவையில் சேர்க்கப்பட்ட 20 வயதான இவர், தான் இரண்டு நாட்களாகச் சாப்பிடவில்லை எனவும் ஸ்லோவேனியா (Slovenia வுக்குள் இராணுவத்தினருடைய பிரவேசத்தைப் பற்றிக் கேட்டபொழுது. இது ஒரு பிழையான நடவடிக்கை எனத் தான் கருதுவதாயும்பதிலளித்தார்.

இவரின் கூற்றுப் பிழையோ சரியோ யூகோசிலேவியா (Yugoslavia)வின் எதிர்காலத்தைக்கேள்விக் குறியாக்கக் கூடிய அளவுக்கு பயங்கரமான கிளர்ச்சி ஆரம்பமாகிவிட்டது என்பது மாத்திரம் உண்மை. யூகோசிலோவியா (Yugoslavia) சமஷ்டி அமைப்பு துண்டாடப்பட்டுச் சிறு சிறு நாடுகளாகப் பிளவுபடுமா? சர்வதேச அரங்கில் ஸ்லோவேனியா (Slovenia) யூகோசிலேவியா (Yugoslavia)விலிருந்து பிரிந்து செல்வதற்கு கிடைக்கும் ஆதரவு, நாடு நிச்சயமாக பிளவுபட்டுவிடும் என்பதையே காட்டுகின்றது. இது மற்றைய மாநிலங்களும் பிரிந்து கூட்டாகச் கூட்டாட்சி (Federation) அமைக்க அடிகோலவிடும். இது மிகவும் கவலையைத் தருகின்றது. இவையாவும் இரத்தக் களரியின்றி நிறைவேறுமா? என்பதே தற்போதைய முக்கியமான கேள்வியாகும்.

யூகோசிலோவியா (Yugoslavia)வின் இத்தாலி (Italy) ஆஸ்திரியா (Austria) ஹங்கேரி (Hungary) ஆகிய நாடுகளுடனான எல்லைகளிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் சமஷ்டி இராணுவத்திற்கும் ஸ்லோவேனியா (Slovenia)த் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்து வரும் பயங்கரமான மோதல்களில் வெலிக்காவாஸ் (Velikvas) கிராமத்தில் நடந்த மோதலும் ஒன்றாகும். இராணுவத்தினர் அரசாங்கத்தின் கட்டுப்பாடில்லாமல் தன்னிச்சையாகவே இந்தமோதல்களில் ஈடுபடுகின்றார்கள் என உலகம் இவர்களைக் குறை கூறுகின்றது ஐரோப்பிய சமூக சமாதானக் குழு ஒன்று இரு முறை சமாதானத்தை ஏற்படுத்த முயன்றும் அந்த முயற்சி தோல்வியுற்றதன் காரணமாக சமஷ்டி இராணுவத்தினருக்கும், ஸ்லோவேனியப் (Slovenia) படைகளுக்குமிடையில் பரவலாக நடந்த மோதல்களில் 57 பேர் இறந்தும் 280 பேர் காயமுற்றுமுள்ளார்கள், தோல்வியுற்ற சமாதானத்தை ஏற்படுத்திய வாரமுடிவில் ஸ்லோவேனியா (Slovenia) பத்தாயிரம் ஆயுதம் தரித்த தனது தீவிரவாதப் படையினரைக் கலைத்தது. தன்னால் கைது செய்யப்பட்ட சமஷ்டி படையினரை அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. சமஷ்டி இராணுவம் தங்கள் படையணிகளைப் பாசறைக்குத் திருப்பி அழைத்துக் கொண்டது. இந்த சமாதான உடன்படிக்கை சரிவரக் கடைப்பிடிக்கப்படாமையால் அபாயகரமான சூழ் நிலை நிலவியது.

இந்த நெருக்கடி ஸ்லோவேனியா (Slovenia) அல்லது பெல்கிறேட் (Belgradc)டை மாத்திரமின்றி யூகோசிலோவியா (Yugoslavia) முழுவதையும் அபாயகரமான நிலைக்கு இட்டுச் சென்று விட்டது. சிறு தவறு இழைத்தாலும் அது முழு நாட்டையும் அழிவுக்கு கொண்டு செல்லும் தாக்குதலை ஒருவர் மேற்கொள்ளாவிட்டால் அவருடைய எதிரி அதைக் கட்டாயம் மேற்கொள்வார் என்ற நிலை உருவாகியது. ஸ்லோவேனியா (Slovenia) வில் நடக்கும் சம்பவங்களுக்கு உடனடியான தனது கவனத்தைச் சமஷ்டி அரசு செலுத்த வேண்டிய வேளையில் குறோசியா (Crotia) விலும் நிலைமை பயங்கரமாக இருந்தது. ஸ்லோவேனியா (Slovenia) சுதந்திரப் பிரகடனம் செய்த அதே நாளில் சுதந்திரப்பிரகடனம் செய்த குறோசியா (Crotia) ஸ்லோவேனியா (Slovenia) செய்தது போல் சமஷ்டி அரசிற்கு ஆத்திரமூட்டக் கூடிய வகையில் அதன் எல்லைகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவில்லை.

குறோசியன் (Crotian) குடியரசைச் சேர்ந்த காவல்துறையினருக்கும் அங்குள்ள சிறுபான்மை சேர்பியன் (Serbian) இன மக்களுக்கிடையே பல மாதங்களாக நடந்துவரும் மோதல்களில் பலர் இறந்தும், பலர் காயப்பட்டுமுள்ளதாக அறிய முடிகின்றது

ஸ்லோவேனியா (Slovenia)வின் தரைப்படையணி சமஷ்டிப் படைகளுக்கு இன்னும் இழப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றது. ஸ்லோவேனியா (Slovenia)வின் கொடி அதன் சர்வதேச எல்லையினுள் 27 காவலரண்களில் இன்னமும் பறந்து கொண்டிருக்கின்றது. ஸ்லோவேனியா (Slovenia) வின் அதிபர் திரு மிலான்குக்கன் (Milankucan) ஜெர்மனிய வெளிநாட்டமைச்சரான திரு ஹான்ஸ் டீற்றிச் ஜென்சரைச் (Hans Dietrich Genscher) சந்தித்த போது சென்றவாரம் நிகழ்ந்த பயங்கரமான நிகழ்வுகளுக்குப் பின் யூகோசிலோவியா (Yugoslavia) இனி எக்காலத்திலும் ஒன்று படுத்த முடியாது எனக் கூறியுள்ளார்.

இவர் கூறுவதுபோல் யூகோசிலாவியா (Yugoslavia வை ஐக்கியப்படுத்த முடியாவிட்டாலும், அதை ஐக்கியப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யூகோசிலாவியாவின் [Yugoslavia] ஆறு குடியரசுகளையும் இரண்டு சுயாட்சி மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் யூகோசிலாவியா [Yugoslavia] வின் கூட்டு ஜனாதிபதி வாரமுடிவில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தார். எல்லைக் காவலரண்களை ஸ்லோவேனியா [Slovenia] ஞாயிற்றுக்கிழமை நண்பகலுக்கு முன்னதாக சமஷ்டிப் படைகளிடம் கையளிக்க வேண்டும் என்றும். ஸ்லோவேனியப் [Sloveuia] படைகளால் முற்றுகையிடப்பட்ட இராணுவத்தினர் முகாம்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக முற்றுகை விலக்கப்படவேண்டும்என்னும் கோரிக்கைகளுடன் கூடிய ஏழு அம்சங்களைக் கொண்ட காலக்கெடுவை ஸ்லோவேனியாவிற்கு (Slovenia) சமஷ்டி ஜனாதிபதி விடுத்தார். இதற்கு ஸ்லோவேனிய (Slovenia) அரசாங்கம் எல்லைகளின் கட்டுப்பாட்டைத் தான் இழக்கத் தயாரில்லை எனப் பதிலளித்தது. இத்தாலி (Italy) ஆஸ்திரியா (Austria) ஆகிய நாடுகளுடன் யூகோசிலாவியா (Yugoslavia) இனிமேல் எல்லையைக் கொண்டிருக்க முடியாது என நான் திட்டவட்டமாகக் கூறுகின்றேன்' என ஸ்லோவேனிய (Slovenia) தகவல் அமைச்சர் வெல்க்ஜோ கசின் (Velkjo Kacin) கூறினார்.




(தொடரும்)

# இல.தமிழர் நலனைப் பாதுகாப்பதே இந்தியாவிற்கு உகந்தது

## ஜனதா தளம் தீர்மானம்

(டில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த தவறான கொள்கைகள் காரணமாக பெரும் துயரமளிக்கும் கடுமையான விலை செலுத்தப்பட்டுவிட்டது சிறுபான்மையினரான இலங்கைத் தமிழர்களின் நலன்கள் காக்கப்படுவதே இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளின் நலன்களுக்கும் உகந்தது இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்றை இந்திய ஜனதா தளம் கட்சி தேசிய செயற்குழு நிறைவேற்றியுள்ளது.

இதனிடையே தமிழகத்தின் கடற்கரையோர கிராமங்கள் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகவும், அதனால் தமிழக கடற்படை, கடலோரக் காவற்படை என்பன விரிவுபடுத்தப்பட்டு பலப்படுத்தப்படவேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் நாராயணசாமி நேற்று மாநிலங்களவையில் கூறினார்.

## இளைப்பாறிய அதிபர்கள்

# வங்கிக் கணக்கு பற்றி உடன் அறிவிக்கவும்

இளைப்பாறிய அதிபர்கள், அவர்கள் கடமையாற்றிய காலத்தில் வசதிக் கட்டணக் கணக்குகளையும், வங்கிக் கணக்குகளையும் ஒழுங்காகப் பேணி வந்தார்களா என்பது பற்றி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். கல்வித் திணைக்களம் தற்போதைய அதிபர்களையும் கோட்டக்கல்வி அதிகாரிகளையும் கோரியுள்ளது.

மேலும் அவர்கள் சேவையாற்றிய காலத்தில் பொருட் பதிவேடுகளை ஒழுங்காகப் பேணி வந்தார்களா என்பது பற்றியும், இவர்கள் கடமையாற்றிய காலத்தில் பாடசாலைச் சொத்துகளுக்கு ஏதாவது இழப்பு ஏற்பட்டதா? இது குறித்து யாழ். கல்வித்திணைக்களத்திற்கு முறையாக அறிவிக்கப்பட்டதா என்பது பற்றியும் வருடாந்தக் கணக்கெடுப்பு எப்போது நடத்தப்பட்டது என்பது பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தற்போதைய அதிபர்களிடம் அவசரமாகக் கோரப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காகித உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனமையப் பணியகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

இத்துறையில் தற்போது செயற்படுபவர்களும, ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது

---

சபாநாயகரின்

ஐம்பது சதவீதத்துக்குமேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை ஒன்றைச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தனர். சபாநாயகரும் அதன் தார்பரியங்களை ஆராய்ந்து திருப்தியடைந்தவராக அந்தப் பிரேரணையை ஏற்று ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டும்

---

மணலாற்றுப்

★ றொசிற்றா (செல்வி சுப்பு மன்னார்),

★ சகாயா (மேரிமார்க்கிரட் தங்கராசா வட்டக்கண்டல் மன்னார்),

★ சயகுமார் (வடிவேலு சந்திரகுமார், கரம்பைக்குளம் வவுனியா) ஆகியோரும் செவ்வாய்க்கிழமை மோதலில்

★ ஜஸ்ரின் (பொன்னுச்சாமி பாஸ்கரன், தையிட்டி காங்கேசன்துறை),

★ சுருளி (தெய்வேந்திரம் வசந்தராசா, சாவற்காடு, சுதுமலை),

★ மகான் (முருகேசபிள்ளை தியாகராசா, வண்ணார் பண்ணை)

★ அறிவழகன் (சுப்பிரமணியம் வேலாயுதம், கிளிநொச்சி),

★ மில்லன் (தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ். உரும்பராய்),

★ லோகிதன் (சின்னத்தம்பி கோகிலானந்தன் கரவெட்டி மேற்கு)

ஆகியோர் வீரமரணம் அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

---

மணலாற்றில்

வம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும்அவர், மணலாற்றுப் பகுதிக்கு பிரிகேடியர் சொர்ணம் பொறுப்பாக இருப்பதாகவும் அவர் தற்பொழுது பிரபாகரனுடன் யுத்தம் பற்றிப் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என இரகசிய தகவல்கள் மேலும் தெரிய வருகின்றது என்றும் தெரிவித்தார்

---

சிறிலங்காவில்

---

## கலந்துரையாடல்

தென்மராட்சியிலுள்ள சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும், ஆசிரியர்களும் இன்று வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி தனியார் கல்வி நிறுவனத்தின் செயலாளர் திரு சு. சிவகாந்தன் கேட்டுள்ளார்.

---

ஆட்சேர்ப்பின்

பாதுகாப்பு தகவல் பணியகத்தில் இருந்து பெறப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது

---

காவலரண்

இச் சம்பவம் நேற்றுக் காலை 8·45 மணியளவில் நிகழ்ந்துள்ளது. இராணுவத்தினர் செட்டிகுளம் காவலரணில் இருந்து நூறு யார் தூரம் முன்வந்தபோதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இத்தாக்குதலின்போது இராணுவத்தினரிடமிருந்து ரி 56-1 ரகத் துப்பாக்கி 1. மகஸீன் 61 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

---

வீடுகள் யாவும்

பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து அனைத்துப் பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர். இப்பகுதியில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களிடமிருந்த பொருள்களையும் பயமுறுத்திப் பறிமுதல் செய்துள்ளனர். அங்கிருந்த பெண்களின் காதணிகளைக் கூட கச்சிதமாகக் கழற்றி எடுத்துக் கொண்டுவிட்டனர். சூறையாடப்பட்ட வீடுகளை உடைத்து தமக்குத் தேவையான

---

# மட்டுவிலில் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

(கொடிகாமம்)

மணலாற்றில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீர வேங்கைகளான

★ கிருஸ்ற்றி (பாக்கியதுரை ரங்கராசா, திருமலை)

★ சன் (வல்லிபுரம் புவனேந்திரராசா நாவற்குழி)

★ லொஜி (தர்மலிங்கம் கௌரிமலர், மிருசுவில்)

★ தோத்திரன் (கந்தப்பு மணியம், மட்டக்களப்பு)

★ பிரியன் (சின்னத்தம்பி யோகராசா, மட்டக்களப்பு)

ஆகியோரின் புகழுடல்கள் புதன்கிழமை பிற்பகல் மக்களின் அஞ்சலிக்காக மட்டுவில் மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டது. பின்பு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது அஞ்சலிக் கூட்டத்தில் வி. பு. ம. முன்னணியின் பிரமுகர்கள், ஆசிரியர்கள் உரை நிகழ்த்தினர். அதன் பின்பு இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது இந்த புகழுடல்களுக்கு நூற்றுக் கணக்கான பொதுமக்கள் மாணவ. மாணவிகள் அஞ்சலி செலுத்தினர். (86)

# கிராமம், நகரம் எங்கும் திலீபன் நினைவு நாள்

தியாகி திலீபனை நினைவு கூர்ந்து கிராமங்கள், நகரங்கள் தோறும் நினைவு பந்தல்களும், தோரணங்களும், வர்ணக் கொடிகளும் வீதிவளைவுகளும் எழுச்சிபெற்று வருகின்றன

யாழ். நகரத்தின் மத்தியில் பிரமாண்டமான மேடை ஒன்று அமைக்கப்பட்டு அதில் ஒரு கதிரையில் திலீபன் உண்ணாவிரதம் இருப்பது போன்ற உருவம் வைக்கப்பட்டுள்ளது. நகரை சுற்றி அனைத்து வீதிகளிலும் சிவப்பு மஞ்சள் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. சுவர்களில் எழுச்சியூட்டும் திலீபன் ஞாபகார்த்த நாலாம் ஆண்டு நினைவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதேபோல மானிப்பாய் நகரம், வட்டுக்கோட்டை, சங்கானை, இளவாலை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, சுன்னாகம், மருதனாமடம், கோண்டாவில். தாவடி, கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி, நீர்வேலி போன்ற வலிகாமத்தைச் சேர்ந்த அனைத்து ஊர்களிலும் திலீபனுக்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஊரெழுவில் ஒவ்வொரு வீடுகளும் திலீபனின் வீடுகளாக காட்சி தருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் திலீபனின் படம் வைக்கப்பட்டு மாலை இடப்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சியில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, கரவெட்டி போன்ற இடங்களிலும் தென்மராட்சியில் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் திலீபன் ஞாபகார்த்த பந்தல்கள் எழுச்சி ஊட்டும் வகையில்வடிவமைக்கப்பட்டு தேசிய நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகின்றன.

---

புத்தூர்

பகுதியை மருந்துக் கடையொன்றுக்கு விற்க முயற்சித்த சமயம் கிடைத்த இரகசிய தகவலை ஒட்டி அங்கு சென்ற ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தினரிடம் அவர் சிக்கியுள்ளார்.

ஒரு தொகுதி மருந்துவகைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் புலிகளிடம் விசார

---

## மேலும் ஒருவர் கைது

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகசுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்ற குற்றத்திற்காக நேற்றுமுன்தினம் மேலும் ஒருவர் திருச்சியில் கைது செய்யப்பட்டார்.

இவருடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினொன்றாகும்.

---

அடுத்த

பாடமுடிவில் முப்பது நிமிடம் மதிய இடைவேளைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8.15ற்கு ஆரம்பமாகும் பாடசாலைகள் 2 15ற்கு முடிவடையும் எனவும் 8 30ற்கு ஆரம்பமாகும் பாடசாலைகள் 2 30ற்கு முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.இடம்பெயர்ந்த பாடசாலைகள் இணைந்து இரண்டு பாடசாலைகள் நடைபெறும் பாடசாலைகள் தத்தமது கோட்ட அதிகாரியைச் சந்தித்து தத்தமது நேர ஒழுங்கினை பெற்றுக்கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார்.

சகலபாடசாலைகளும் ஒரே நேரத்தில் ஆரம்பமாகி முடிவடைய வேண்டும் என்பதற்காகவே மேற்படி நடவடிக்கை

யாற்றிய காலத்தில் பொருட் பதிவேடுகளை ஒழுங்காகப் பேணி வந்தார்களா என்பது பற்றியும், இவர்கள் கடமையாற்றிய காலத்தில் பாடசாலைச் சொத்துகளுக்கு ஏதாவது இழப்பு ஏற்பட்டதா? இது குறித்து யாழ். கல்வித்திணைக்களத்திற்கு முறையாக அறிவிக்கப்பட்டதா என்பது பற்றி

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காகித உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனமையப் பணியகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

இத்துறையில் தற்போது செயற்படுபவர்களும், ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள்இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது

---

**சபாநாயகரின்**

ஐம்பது சதவீதத்துக்குமேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை ஒன்றைச்சபாநாயகருக்குச் சமர்ப்பித்தனர். சபாநாயகரும் அதன் தார்பரியங்களை ஆராய்ந்து திருப்தியடைந்தவராக அந்தப் பிரேரணையை ஏற்று ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு, சட்டவிதிகளின்படி சபாநாயகருக்கு இல்லை. ஆனால் அவசியமானால் அவர் சட்டமா அதிபரின் ஆலோசனையை கேட்டுப் பெறலாம் அப்படிஅவர் கேட்டால் மட்டுமே சட்டமா அதிபரும் ஆலோசனையை வழங்கலாம்.

எனவே சட்டமா அதிபர் ஜனாதிபதிக்குத் தற்போது வழங்கியிருக்கும் ஆலோசனையைச் சபாநாயகர் முழுக்க முழுக்க கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதற்கில்லை அவர் சுதந்திரமாகச் செயற்பட்டு முடிவை மேற்கொள்ளலாம்.

மன்னார்).

★ சயகுமார் (வடிவேலு சந்திரகுமார், கரம்பைபக்குளம் வவுனியா) ஆகியோரும் செவ்வாய்க்கிழமை மோதலில்

★ ஜஸ்ரின் (பொன்னுச்சாமி பாஸ்கரன், தையிட்டி காங்கேசன்துறை),

★ சுருளி (தெய்வேந்திரம் வசந்தராசா, சாவற்காடு, சுதுமலை),

★ மகான் (முருகேசபிள்ளை தியாகராசா, வண்ணார் பண்ணை)

★ அறிவழகன் (சுப்பிரமணியம் வேலாயுதம், கிளிநொச்சி),

★ மில்லன் (தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ். உரும்பிராய்),

★ லோகிதன் (சின்னத்தம்பி கோகிலனந்தன் கரவெட்டி மேற்கு)

ஆகியோர் வீரமரணம் அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

---

**மணலாற்றில்**

வம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும்அவர், மணலாற்றுப் பகுதிக்கு பிரிகேடியர் சொர்ணம் பொறுப்பாக இருப்பதாகவும் அவர் தற்பொழுது பிரபாகரனுடன் யுத்தம் பற்றிப் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என இரகசிய தகவல்கள் மேலும் தெரிய வருகின்றது என்றும் தெரிவித்தார்

---

**சிறிலங்காவில்**

விலகியதைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு ஆதரவாக 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளித்துள்ளார்கள் என்பது கேள்விக்குரியதாக மாறிவிட்டது என்றும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

இதேவேளை நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர்களின் இராஜினாமா பற்றிய பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது எனக்கூறியுள்ளார்.


### இயந்திரஇயக்குனர், அச்சுக்கோப்பாளர்

## தேவை

அனுபவம் வாய்ந்த இயந்திரஇயக்குனர், அச்சுக்கோப்பாளர் உடன் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
விளம்பர இல. 115
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(R/3151)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


யில் நடைபெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி தனியார் கல்வி நிறுவனத்தின் செயலாளர் திரு சு. சிவகாந்தன் கேட்டுள்ளார்.

---

**ஆட்சேர்ப்பின்**

பாதுகாப்பு தகவல் பணியகத்தில் இருந்து பெறப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது

---

**காவலரண்**

இச் சம்பவம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் நிகழ்ந்துள்ளது. இராணுவத்தினர் செட்டிகுளம் காவலரணில் இருந்து நூறு யார் தூரம் முன்வந்தபோதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இத்தாக்குதலின்போது இராணுவத்தினரிடமிருந்து ரி 56-1 ரகத் துப்பாக்கி 1. மகஸின் 61 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

---

**வீடுகள் யாவும்**

பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து அனைத்துப் பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர். இப்பகுதியில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களிடமிருந்த பொருள்களையும் பயமுறுத்திப் பறிமுதல் செய்துள்ளனர். அங்கிருந்த பெண்களின் காதணிகளைக் கூட கச்சிதமாகக் கழற்றி எடுத்துக் கொண்டுவிட்டனர். சூறையாடப்பட்ட வீடுகளை உடைத்து தமக்குத் தேவையான காப்பரண்களையும், பதுங்கு குழிகளையும் அமைத்துள்ளனர். இதனால் இப்பகுதியில் காணப்பட்ட அனைத்துப் பொதுமக்களின் வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. சிறியகுடிசைவீடுகள் அனைத்தும்தீயிட்டுக்கொளுத்தப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் வீட்டுத்தளபாடங்களும் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டு வீதியோரங்களில் வீசப்பட்டிருக்கின்றன.

இப்பெண்மணிகள் தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள்பற்றி மேலும் கூறுகையில் தமது பகுதிக்குள் இராணுவத்தினர் புகுந்துகொண்ட ஆரம்ப காலப் பகுதியில் தமக்குத் தேவையான உணவுப்பொருள்களே கிடைக்காமல் தாம் பெரிதும் சிரமப்பட்டதாகவும் தமது வீட்டுக்குள் திடீர்திடீரென புகுந்து இராணுவத்தினர் தம்மை வெளியேற்றிவிட்டு பெறுமதி வாய்ந்த பல பொருள்களைச் சூறையாடிச் சென்றதாகவும், தாம் தமது சுற்றாடலில் சுதந்திரமாக நடமாடுவதற்குப் பெரும் கட்டுப்பாடுகள் விதித்ததாகவும் தெரிவித்தனர்.

தற்பொழுதும் மேற்படி பகுதிகளில் நாற்பதிற்கும் மேற்பட்ட மக்கள் இராணுவத்தினரின் பிடியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க, லோ)

யாழ். நகரத்தின் மத்தியில் பிரமாண்டமான மேடை ஒன்று அமைக்கப்பட்டு அதில் ஒரு கதிரையில் திலீபன் உண்ணாவிரதம் இருப்பது போன்ற உருவம் வைக்கப்பட்டுள்ளது. நகரை சுற்றி அனைத்து வீதிகளிலும் சிவப்பு மஞ்சள் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. சுவர்களில் எழுச்சியூட்டும் திலீபன் ஞாபகார்த்த நாலாம் ஆண்டு நினைவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதேபோல மானிப்பாய் நகரம், வட்டுக்கோட்டை, சங்கானை, இளவாலை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, சுன்னாகம், மருதனாமடம், கோண்டாவில். தாவடி, கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி, நீர்வேலி போன்ற வலிகாமத்தைச் சேர்ந்த அனைத்து ஊர்களிலும் திலீபனுக்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஊரெழுவில் ஒவ்வொரு வீடுகளும் திலீபனின் வீடுகளாக காட்சி தருகின்றன. ஒவ்வொரு வீட்டி

---

**புத்தூர்**

பகுதியை மருந்துக் கடையொன்றுக்கு விற்க முயற்சித்த சமயம் கிடைத்த இரகசிய தகவலை ஒட்டி அங்கு சென்ற ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தினரிடம் அவர் சிக்கியுள்ளார்.

ஒரு தொகுதி மருந்துவகைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் புலிகளிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கிறது.

---

**ஆயுதம்**

பேச்சுவார்த்தை நடத்தியது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணவே என்றும், இப்பேச்சுக்களில், அமைச்சர்கள் ஏ. சீ, எஸ். ஹமீத், ரணில் விக்கிரமசிங்கா, ரஞ்சன் விஜேரட்ண, பெஸ்டஸ் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தியப்படையினர் நாட்டிலிருந்து விலகிச் சென்றபோது உருவாக்கிய தமிழ்த் தேசிய இராணுவத்தை, விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து சிறிலங்காப் படைகள் தாக்கினர் என்றும், கிழக்கு மாகாண மக்களைப் பாதுகாக்கவே இவ்விதம் செய்யப்பட்டது எனவும், இந்தச் சம்பவமே தற்போது திரித்துக் கூறப்படுவதாகவும்–விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொடுக்கப்பட்டதாக பொய்யான-தவறான பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார். தற்போதும் புளொட், ஈ.பி.டி.பி. ஆகியன சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் புலிகளைத் தாக்கி வருவதாகவும் கூறினார். மேலும்,

"அதிருப்தியாளர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு பதில் அளிக்கவேண்டும் என்ற அச்சத்தினால் பாராளுமன்ற அமர்வை ஒத்திவைக்கவில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக எடுக்கப்பட்ட சூழ்ச்சிகள் பற்றித் தான் அறிய விரும்புவதாகவும், தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவை என்று தெரியாமல் தன்னால் அதற்குப் பதில் அளிக்க முடியாது என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

"பிழையான தகவல்களைக் கேட்டே தாங்கள் தீர்மானத்தில் கைச்சாத்திட்டதாக" பல பாராளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்தே பாராளுமன்றத்தை ஒத்தி வைத்ததாகவும் தெரிவித்தார்.

என்ன விபரம் என்று தெரியாமல் கையெழுத்திட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை மன்னிக்கத் தாம் தயார் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற பதிவேட்டில் இந்தத் தீர்மானத்தை பதிய சபாநாயகருக்கு இரண்டு நாள் அவகாசம் இருந்தது என்றும் அதனை அவர் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் பிரேமதாசா தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இடங்களிலும் தென்மராட்சியில் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் திலீபன் ஞாபகார்த்த பந்தல்கள் எழுச்சி ஊட்டும் வகையில்வடிவமைக்கப்பட்டு தேசிய நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகின்றன.

---

## மேலும் ஒருவர் கைது

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகசுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்ற குற்றத்திற்காக நேற்றுமுன்தினம் மேலும் ஒருவர் திருச்சியில் கைது செய்யப்பட்டார்.

இவருடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினொன்றாகும்.

---

**அடுத்த**

பாடமுடிவில் முப்பது நிமிடம் மதிய இடைவேளைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8.15ற்கு ஆரம்பமாகும் பாடசாலைகள் 2 15ற்கு முடிவடையும் எனவும் 8.30ற்கு ஆரம்பமாகும் பாடசாலைகள் 2 30ற்கு முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.இடம்பெயர்ந்த பாடசாலைகள் இணைந்து இரண்டு பாடசாலைகள் நடைபெறும் பாடசாலைகள் தத்தமது கோட்ட அதிகாரியைச் சந்தித்து தத்தமது நேர ஒழுங்கினை பெற்றுக்கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார்.

சகலபாடசாலைகளும் ஒரே நேரத்தில் ஆரம்பமாகி முடிவடைய வேண்டும் என்பதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் எமது நிருபருக்குத் தெரிவித்தார். (ச)